www.Padasalai.Net www.CBSEtips.in

11ஆம் வகுப்பு **காலாண்டுப் பொதுத் தேர்வு - 2022** பதிவு எண். 

காலம் : 3.00 மணி SLQ **பொதுத்தமிழ்** மதிப்பெண்கள் : 90

## பகுதி - I (செய்யுள், உரைநடை) 14 X 1 = 14

குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் பொருத்தமான விடையைத் தேர்க. iii) குறியீட்டுடன் விடையினையும் சேர்த்தெழுதுக.

1. பாயிரம் இல்லது அன்றே அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை
2. தன்னுடைய கவிதைகளுக்காக 1971 ஆம் ஆண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றவர்
   அ) பாப்லோ நெருடா ஆ) வால்ட் விட்மன் இ) ஸ்டெஃபான் மல்லார்மே ஈ) எர்னஸ்ட் காசிரர்
3. தமிழர் பாரம்பரிய நாள் அ) ஜனவரி 1 ஆ) ஜனவரி 15 இ) ஆகஸ்ட 15 ஈ) ஜனவரி 14
4. பொருத்தமான இலக்கிய வடிவம் எது? அ) ஏதிலிக் குருவிகள் - மரபுக்கவிதை
   ஆ) திருமலை முருகன் பள்ளு - சிறுகதை இ) யானை டாக்டர் - குறும்புதினம் ஈ) ஐங்குறு நூறு - புதுக்கவிதை
5. கருப்பட்டி பனங்கற்கண்டு போன்றவை 1) மதிப்புக் கூட்டுப்பொருள் 2) நேரடிப் பொருள்
   அ) 1 மட்டும் சரி ஆ) 2 மட்டும் சரி இ) இரண்டும் சரி ஈ) 1 தவறு 2 சரி
6. வேற்றுநிலை மெய்ம்மயக்கத்திற்கு மட்டுமே உரிய மெய்யெழுத்துகள் அ) க், ச் ஆ) த், ப் இ) ட், ற் ஈ) ர், ழ்
7. **கூற்று :** "கோடு" என்பது தமிழ்ச்சொல் ஆகும்
   **விளக்கம் :** கோடு என்னும் சொல்லுக்கு மலையுச்சி, வல்லரண், கோட்டை என்னும் பொருள்களும் உண்டு.
   அ) கூற்று சரி, விளக்கம் தவறு ஆ) கூற்றும் சரி, விளக்கமும் சரி
   இ) கூற்று தவறு, விளக்கம் சரி ஈ) கூற்றும் தவறு, விளக்கமும் தவறு
8. பகுபத உறுப்புகளுள் இடம் பெறும் அடிப்படை உறுப்புகள் எவை? அ) பகுதி, இடைநிலை, சந்தி சாரியை, விகுதி விகாரம்
   ஆ) பகுதி இடைநிலை, சாரியை இ) பகுதி, சந்தி, விகாரம் ஈ) பகுதி, விகுதி
9. உரையாசிரியர்கள் பலராலும் அதிகமாக மேற்கோள் காட்டப்பட்ட எட்டுத்தொகை நூல்
   அ) குறுந்தொகை ஆ) நற்றிணை இ) புறநானூறு ஈ) அகநானூறு
10. ......... வாழ்வாரே வாழ்வார் அ) இசையொழிய ஆ) வாழ்வாங்கு இ) நிலையின் திரியாது ஈ) வசையொழிய
11. ஒப்புரவு என்பதன் பொருள் ........ .
    அ) அடக்கமுடையது ஆ) பண்புடையது இ) ஊருக்கு உதவுவது ஈ) செல்வமுடையது
12. தொல்காப்பியத்திலுள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை அ) 9 ஆ) 3 இ) 27 ஈ) 13
13. சமய நூலும் தத்துவ நூலும் கற்பிப்போர் அ) கணக்காயர் ஆ) சான்றோர் இ) ஆசிரியர் ஈ) குரவர்
14. 'பிள்ளைக்கூடம்' கவிதை இடம் பெற்ற நூல் அ) நெருஞ்சி ஆ) சுடுபூக்கள் இ) கொடிவிளக்கு ஈ) மறுபயணம்

## பகுதி - II (பிரிவு - 1)

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடையளிக்கவும்.** 3 X 2 = 6

15. 'பாயிரம்' பற்றி நீங்கள் அறியும் கருத்து யாது?
16. காற்றின் தீராத பக்கங்களில் எது எதனை எழுதிச் சென்றது?
17. தமிழர்கள் புகழ், பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?
18. 'நற்றிணை' குறிப்பு வரைக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2 X 2 = 4

19. பேச்சுமொழி, எழுத்து மொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது ஏன்?
20. மதிப்புக் கூட்டுப்பொருள் என்றால் என்ன? சான்று தருக.
21. 'கோட்டை' என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?

### பிரிவு - 3

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடை எழுதுக.** 7 X 2 = 14

22. உயிரீறு, மெய்யீறு - விளக்குக.
23. *ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக.* அ) அலர்ந்து ஆ) ஈன்ற
24. தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.
    பிறர் செய்யாவிட்டாலும் செய்த தீமை மறக்கக்கூடாது நன்மை செய்யக்கூடாது உதவியை.
25. ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி எழுதுக. அ) புகழெனின் ஆ) மாசற்றார்
26. *மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.* பொரி, பொறி
27. *சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க?* கால்நடை
28. *கலைச் சொல்லாக்கம் எழுதுக.* அ) Ethnic group ஆ) Journalist
29. *வேர்ச்சொல், எதிர்மறை இடைநிலை, விகுதி ஆகியவற்றைச் சேர்த்துச் சொற்களை உருவாக்குக.*
    பார் —> ஆ —> ஆன் —> ?
    காண் —> அல் —> அள் —> ?
    உரை —> இல் —> அர் —> ?



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

30. 'பேசு' என்னும் வேர்ச்சொல்லின் வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம், வினையாலணையும் பெயர் இவற்றைத் தொடரில் அமைத்து எழுதுக?

## பகுதி - III (பிரிவு - 1)

**ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை தருக. எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக.** 2 X 4 = 8

31. 'என்னுயிர் தமிழ்மொழி என்பேன்' என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப்பற்றினை எழுதுக.
32. காற்றில் ஆடும் புல் வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு யாது? ஏன்?
33. தமிழ்ப்பண்பாட்டின் அடையாளம் காவடிச் சிந்து என்பதை விளக்குக.
34. 'ஏவல் மறுக்கும் சிறுவிளையாட்டி,
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொல்' - இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

## (பிரிவு - 2)

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக.** 2 X 4 = 8

35. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? நும் கருத்தை எழுதுக.
36. 'மலை மனிதவாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது' என்பதை எடுத்துக்காட்டுடன் விவரிக்க.
37. தமிழ் இலக்கியங்களில் கல்வி குறித்து நீங்கள் அறிந்த செய்திகளை அட்டவணைப்படுத்துக.
38. பேச்சுமொழியைக் கவிதையில் பயன்படுத்திய மூன்று வகைக கவிஞர்கள் குறித்து எழுதுக.

## பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக.** 3 X 4 = 12

39. வேற்றுமை அணி. *(அல்லது)* உவமை அணியைச் சான்றுடன் விளக்குக.
40. ***தமிழாக்கம் தருக.*** அ) Knowledge rules the world. ஆ) The pen is mightier than the sward.
இ) A picture is worth a thousand words. ஈ) Simplicity is nature's first step, and the last of art.
41. **இலக்கிய நயம் பாராட்டுக.**

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் - ஈசன்;
மண்ணுக்குள்ளே சிலமூடர் - நல்ல
மர்தர் அறிவைக் கெடுத்தார்
கண்கள் இரண்டினில் ஒன்றைக் - குத்தி
காட்சி கெடுத்திட லாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்
பேதமை யற்றிடும் காணீர்! - *பாரதியார்.*

42. 'ஆங்கிலேயர் வருகை' குறித்து உடன்பட்டும் மறுத்தும் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.
43. **கீழ்க்காணும் நிகழ்ச்சி நிரலினைப் படித்துச் செய்திக் கட்டுரையாக மாற்றுக.**

| நிகழ்ச்சி நிரல் 'அரியன கேள் புதியன செய்' (திங்கள் கூடுகை) | |
|---|---|
| நேரம் 2.30 பிற்பகல் | இடம் அ.மே.நி.பள்ளி |
| 2.30 | தமிழ்த்தாய் வாழ்த்து |
| 2.35 | வரவேற்புரை - மாணவர் இலக்கியச் செல்வன் |
| 2.40 | தலைமையுரை - திரு.எழிலன், தலைமை ஆசிரியர் |
| 2.50 | சிறப்புரை - கவஞர் வாணி |
| | தலைப்பு : 'புலம்பெயர் தமிழரின் வாழ்க்கை' |
| 3.45 | நன்றியுரை - மாணவர் ஏஞ்சலின் |
| 4.00 | நாட்டுப்பண் |

## பகுதி - IV

**இருபக்கங்களுக்கு மிகாமல் விடை எழுதுக.** 3 X 6 = 18

44. அ) நன்னூல் பொதுப் பாயிரம் சிறப்புப் பாயிரம் வாயிலாக அறியலாகும் செய்திகளைத் தொகுத்துரைக்க? *(அல்லது)*
ஆ) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகை தென்கரை நாட்டுப் பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரிக்க.
45. அ) இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழர்களின் இருப்பிடப் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தன - கூற்றினை மெய்ப்பிக்க. *(அல்லது)* ஆ) 'சுற்றுச்சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே என்னும் தலைப்பில் மேடைப் பேச்சிற்கான உரையை உருவாக்குக.
46. அ) பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை? *(அல்லது)* ஆ) யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

## பகுதி - V

**குறிப்பு : அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** 4 + 2 = 6

47. அ) 'உண்டால் அம்ம...' எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலை எழுதுக.
ஆ) 'செயல்' என முடியும் குறளை எழுதுக.



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593